திராவிடர்

முரசொலி

வார வெளியீடு

ஆசிரியர் மு. கருணாநிதி



முரசு 1] [ஒலி 13

திருவாரூர்.

பெரியார் ஆண்டு 69

சித்திரை 2ஆ புதன்

(14—4—48)

ஆண்டுத்தொகை 5

★ அந்நாள் அந்தணர்! ★

மணியோளி.

அந்த நாள் அந்தணர் தென்மை பூண்டொழுகிய தால் அறவோரெனவுங் கூறப்பெற்றனர். அந்த அறவோர் தாம் தானமும் தருமமும் வாங்கத் தக்க சோர்த்தம் செய்தவரோவர். இதுவரையில் மனுதர்மத்தில் உளபடி வெள்ளாட்டுக் கறிகளை உறுப்பு முறைப்படி கொடுத்தவரின் முன்னோரோவி புண்ணிய கதைகள் புகுந்ததனவே சாற்றினர் அன்னவர் மீனையும் எருமைக் கறியையும் சுவைத்திட மறவா செந்தன்மை பூண்டவர்களென்பதை இக்கட்டுரை விளக்கும் ஐம்பெருங் காப்பியம் பெற்றிருப்பது போல ஐஞ் சிறுங்காப்பியத்தில் யசோதர காவியம் என்ற நூலுள், யசோதரனும் அவன் மனைவியும் மீனை வயத்தானிறக்க, பின்னொருகால் அவள் மீனாகவும் அவன் முதலையாகவும் பிறக்கின்றனர். ஒரு காள் கலிங்கநாட்டு வலையுள் அம்மீன் படவே, அதுகண்ட அந்தணர் காவில் நீர் சொட்டியது. அதனை அடைய விரும்பிய அந்தணர் யசோதான் மகனை யசோமதி என்ற மன்னனிடம் சென்று மீனைச் சோதித்தம் செய்தால் உங்குல மூன்னோர் துறக்கமெய்துவர் என்று நவின்ற அவ்வாறே அவன் தர அவர்கள உண்டு மகிழ்ந்தனர். அன்பர் பார்வைக்காக அப் பாடல்களையும் பொழிப்புரையையுந் தருகின்றேன். கண்டு விளக்கம் பெறுக.

"மற்றை மீனுமோர் வார்வலைப் பட்டனை, அற்றையில்வரும் அந்தணர்கண்டனர் கோற்ற மன்னவ! நின் குலத்தார்களுக்குற்ற செய்கை சூழ்த்தென ஓதினர்" யசோ (184)

(பொ-ரை) ஏனை (உலோகித மென்னும் பெயரை யுடைத்தாகிய) மீனும் ஒரு மீன்டை வலையிலகப்பட்டதாக அந்நாளில் அங்கு வந்த அந்தணர் சிலர் கண்டு வெற்றியையுடைய கேந்தே!-(யசோமதி மன்னனே) நின் குலத்துப் பிறந்த முன்னோர்களுக்கு பொருந்திய சோதத்தத்துக்கு இம்மீன் படைத்தற் கமைந்ததாம் என்று சொன்னர்கள்:

உடனே அன்பர்கள் மீனைப் படைக்கலாம் என்றுதானே சென்றார்கள், எங்கையப்பா! உண்டாகள் என்று கேட்கலாம். அதற்குத் தீழ்வரும் பாட்டு விடைதரும்.

"அறுத்த மீனின் அவயவம் ஒன்றினைக். கறித்தி சோமதி இப்புவி காக்கவோர், இறப்பருந்துறக் கத்தின் இசோதரன், சிறக்க வென்றனர். தீவினையாளரே"

(யசோ 185)

(பொ-ரை) அறுக்கப்பட்ட மீனினுடைய ஓர் உறுப்பினை மென்றுதின்று யசோமதி வேந்தன் இப்பூமியை நெடுங காப்பானாக! அழிவில்லாத துறக்கத்திலிருக்கும் யசோதர மன்னன் சிறப்பெய்துவானாக! என்று தீவினைபுரியும் அவ்வந்தணாகள் கூறினர். என்னப்பா 'தீவினையாளர்' என்றுதானே யிருக்கிறது அஃது அந்தணரைக் குறித்ததெப்படி யென்று கேள்வி தோன்றும் அவசரம், வேண்டாம். மேற்பாட்டில் அந்தணர் மீனைக்கண்டார், அதை சோதித்தம செய்யத் தக்கதென்றனர், அரசன் கொடுத்தான் அந்தணர் உண்டனர். தீவினையாளர் என்பது, அவர்கள், துறக்கத்திலில்லாமல் பூவுலகில் காய், மூதலை கோழி ஆயபிறப்புக்களை யெடுத்தலின்ற யசோதரன் துறக்கத்திலிருப்பதாகக் கூறி அவன் பெறுவதும் வாழ்த்தலை தம் தீவினையுடையார் செயலாதலும் மீன் கேட்டு அவன் உண்பதாலும் அவ் வந்தணரைத் தீவினையாளர் என்று ஆசிரியர் சுட்டினர்.

மீனை இக்காலத்து உண்ணுதவர் சிலரென்று கூறி, அதைத் தின்ற அந்தணரும் அத்தகையவரேயென்று கூறிவிடலாம் ஆனால் அவர்கள் தங்களை உயர் சாதியென்று இறமாந்திருக்கும் செயலொழியவே இதனையெடுத்தியம்புகின்றேன்.

மீனைத்தானே கின்றார்கள் இதிலென்ன குற்றமா? என்று கேட்டிடுவீரானால் மீன் மட்டுமல்ல எருமை யூனையும் விடவில்லை. கேடு வாங்கி உடுத்திருக்கிறார்கள். எல்லாம் சோதத்தின் பெயரால்தான் இம்மன்னன் தன் படையால் மையொன்றினைக் கொ விடுகிறான். அதுகண்ட தனர் ஆவல் மிகுதி கேட்டனர்

"இன்றெறிந்த எருமை தினைத், தின்று தின்று கி செயப்பெறின், நன்ற அந்தணர்; நல்கினன், நி சிலர் நீதிகள் ஓதினர்"

(பொ-ரை) இன்று வீழ்த்திய இவ்வெ மிகத்தின்று குல மு குச்சோதத்தஞ் செய நல்லதாமென்று

(11-ம் பக்க

மு. கருணாநிதி

இரத்தக் கண்ணீர்!

தொடர் கதை.

தீக்கக்கோப்பையில் வழிய வழிய ஊற்றப்பட்ட பழச்சாறு .....வெளித்தட்டில் வைக்கப் பட்டிருந்த தேன் கதலி வாழைப் பழங்கள்...பசுமபொன் மெருகு மின்னிடும் பாத்திரத்தில் நிரம்பி யிருந்த பால்...இவைகளை சாப் பிட்டானை பிறகு, வஞ்சியை வாஞ்சையோடு அழைத்தார் ஞானுச்சாயா! ஒரு வெள்ளிக் கெண்டி சுடுநீர வந்து கின்ற வஞ்சி இதழோரப் புன்னை யால் பேசி ஆச்சார்யாவின் உள் ளத்தை ஆழப்பறித்து 'ஸ்வாமி!' என்றாள். "வஞ்சிக்கொடியே! .. உன் தளிர்க்கரத்தில் வெள்ளிப் பூ பூத்திருக்கிறதே" என் று கையை நீட்டிய ஆச்சார்யாவின் மலர்ந்த முகத்தைக் கடைக்கண் களால் ஒருமுறை தழுவிவிட்டு கெண்டியிலுள்ள தண்ணீரை சாய்த்தாள். கைகழுவிக் கொண்டே ஆச்சார்யா "ஹரி ஹர நாராயணா" என்று உரக்க ஒருமுறை கூறிவிட்டு பட்டு மெத்தையில் சாய.....பக்கத்தி லிருந்த பள்ளிய சந்தனக் கிண்ணத்தில் சாய்த்து மணம் நிறைக் கைத்த பிறகு அவர் பொன் வேணியில் பூசி மெத்தை யின் ஓரத்தில் நீண்டுகிடந்த ஆச் சார்யாவின் பாதங்களை வெல் வெட்டு தலையணையில் எடுத்து வைத்து மெல்ல வருட ஆரம் பித்தாள் வஞ்சி 'வஞ்சி...விதி வசமே!' என்று ஆச்சார்யா பல்லல்லாம் தெரிய சொன னதுதான் தாமதம், மான்குட்டி போல் துள்ளி, மயில் விரித் தெடுத்து, மல்லிகை மலர்களை அதில் சொருகி, மெல்ல அசைக் கத்தொடங்கினாள். ஒருகை விசிற.....வஞ்சியின் மற்றொரு கை...மடித்துக் கிடந்த வெற்றி லைச் சுருளை ஆச்சார்யாவின் வாயில் சொருகிற்று. சிவப் பேறிய வாயும், சிரித்த முகமும் ஆச்சார்யா இன்ப லோகத்தில் இருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டின.

"வஞ்சி!...இந்த லோகம்?"

"இந்நாளுக்கும் இந்நா ளைக்கும் கிட்டாத இன்பலோ கம் ஸ்வாமி!"

"இன்ப லோகம்...! இது காமாக இருக்கிறதல்லவா?"

"ஆம் ஸ்வாமி!"

"வஞ்சி! மக்களின் அறியாமை என்ற அஸ்திவாரத்தில் கட்டப் பட்ட கோட்டை இது. இதை யாரும் இடிக்க முடியாது."

"இளவரசன்.....வளர்ந்து விட்டால்.....இந்த இன்பம் நிலைக்குமா ஸ்வாமி!"

"யார் வளர்ந்தால் என்ன...? என் அந்தஸ்து குறையாது வஞ்சி! இளவரசன் வயது முதி யின் பாதுகாப்பாளன் நான். நான் சொன்னபடியே அவன் நடக்கவேண்டும். என் ஆணை மீறினால் அவன் தந்தையை அவ மதித்த பாபத்திற்கு ஆளாக வேண்டும். பாண்டிய மன்னன் சாகும்போது இளவரசனுக்கு இட்ட கட்டளை இது!...இதை இளவரசன் மீறவே முடியாது. அதுமட்டுமல்ல...இளவரசன் இளைஞன்!.....வெறுத்த தெல் லாம் பாலென எண்ணும் பசலைப் பையன்!...அவன் களங்கமற்ற உள்ளத்தை...கொஞ்சங் கொஞ் சமாக களவாடி வருகிறேன். 'கடவுள்'.. அடடா! இந்த வார்த்தையில் எவ்வளவு சக்தி யிருக்கிறது தெரியுமா?.. நான் கடவுளின் தூதன் எண்றே கரு தியிருக்கிறான் அந்தக் கன்றுக் குட்டி!..... ராஜதுரோகி மகா ராஜாவாக மாறி மதுரம் பூசைத் தான்கூட நமக்கொன்றும் நஷ்ட மில்லை. நம்முடைய கொள்கை யெல்லாம் மாபெரும் சாம்ராஜ் யத்தை ஆளவேண்டும் என்பதல்ல! மக்களின் மனதை ஆளவேண்டும். மக்கள் மனோராஜ்யம் கைவசமா னால், சாம்ராஜ்யங்கள் சரிந்தாலும் கவலையில்லை— சரித்திரங்கள் சாய்ந்தாலும் கவலை இல்லை. நம் பரம்பரை நிம்மதியாக...வளமாக ...வசதியோடு வாழ வழி ஏற்பட்டு விடும். சமணமும் பௌத்தமும் சண்டமாருத வேகத்தில் மக்கள் இதயங்களில் இடம்பெறும் இந் நேரத்தில் நாம் சும்மாயிருந்து விட்டால்....நம் வாக்கே வாழ் விழந்து வதங்கிவிடும்.

நமக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. நம்கைப் பாலையாக—நம் சூத்திரக்கயிற் றில் கட்டப்பட்ட பொம்மையாக —இறைவன் வைத்தாடி கிடைத் திருக்கிறான். இந்த நல்ல காலத்தை நழுவ விடாமல்...நம் நோக்கங்கள் வேகமாக நடைபெற வேண்டும். அதிகாரம் நம் பொறுப்பில் இருக்கிறது. ஆட்சி நம் கையில் இருக்கிறது. பட் டாளம் நம் ஆணைக்குக்

(நாளை பக்கம் பாரீர்)

இரத்தக் கண்ணீர்!

(3-ம் பக்க தொடர்ச்சி)

காத்திருக்கிறது. மக்கள் உள்ளத்திலும் மடமை இடம் பெற்றிருக்கிறது. இந்தப் பொன்னை சேரத்தைப் பயன்படுத்தி ...பௌத்தரையும் சமணரையும் பொசுக்கிவிட வேண்டும்.''

இப்படிப் பேசிக்கொண்டேயிருந்த ஆச்சார்யா திடீரென நிறுத்தினர். காரணம்...வஞ்சி, கண்ணயர்ந்து அவர் மார்பில், முகத்தால் ஒருமுறை மோதியதுதான்!

''அருமையான திட்டத்தை எடுத்துச் சொன்னேன். நீ அதற்குள் அயர்ந்துவிட்டாயே...''

''இலவ சுவாமி!'' வஞ்சியின் கண்ணங்கள் வெட்கத்தால் சிவந்தன.

''வஞ்சி...நான் இந்த இரவுகளில்தான் உனக்கு சுவாமி! பகலில் நான் உனக்குத் தந்தை என்பதை மறந்துவிடாதே''

''இல்லை...அப்பா'' இதைக் கிண்டலாக அவள் சொன்னாள். இருவரும் கலகலவென்று சிரித்தார்கள். அந்த அமைதியில் அந்தச் சிரிப்பு...மோகனகரமாயிருந்தது. வஞ்சியின் குரலில் அவ்வளவு இனிமை வழிந்தது. அவள் வேல் விழிகள்—பக்கத்திலிருந்த விளக்கில் பாய,

'சுவாமி விளக்கு'' என்றாள். 'அணைத்துவிடு' என்ற அன்பு கலந்த ஆணை பிறந்தது.

அந்த இருளில் எங்கேயோ ஒரு அகோர இறைச்சல். அதை பொட்டி 'அய்யோ! அய்யோ' என்ற சோக ஒலி. 'விடாதே! வீட்டைக் கொளுத்து!' இந்த பயங்கர உத்திரவு பல தடவைகள் எழுந்தது, 'ஆ! அய்யோ!' மீண்டும் கதறல்.

''என்னடா அய்யோ!...சமணப்பயலே!.....இந்தா சன்மானம்!

''அருகா! அருகா!''

''அருகன்...அருகே வரமாட்டான்!.....சமணமத அபிமானியல்லவா? சரியான பரிசு..... வாங்கிக்கொள்.''

''ஆ...அப்பா!''...சவுக்கடிகளால் தவண்டுபோன ஒரு வாலிபன் சுருண்டு கீழே விழுந்தான். அவன் வீடு எரிந்துகொண்டிருந்தது. அந்த வாலிபன் மேனியைத் தழுவிக்கிடந்த அவன் மனைவி.....ஓவேசங்கொண்டவளாய் எழுந்து ....''ஆ.....என் பிள்ளை.....பிள்ளை''—என்று அலறி அடித்துக்கொண்டு எரியும் வீட்டுக்குள் ஓடினாள். கறகறவென்று முறிந்து விழுந்த வீட்டின் உத்திரங்கள்.....மேல் மாங்கள்.....பக்கத்தில் ஓடிக் கொண்டிருந்த ஆற்றில் விழுந்து அணைந்தன. வீட்டில் கிளம்பிய அந்த கோர வெளிச்சத்தில் ...பக்கத்தில் எந்த வீடுகளுமே இல்லையென்பது கண்முகத் தெரிந்தது. வீட்டுக்குள் ஓடிய இளந்தாய், தன் குழந்தை.....தான் பெற்ற செல்வன்...தன் வயிற்றில் கிடந்த வைரக்கட்டி..... தொட்டிலாடு வெந்து கருதுவதைக் கண்டாள். இறங்து எரியும் தன் கண்மணியைதூக்கிக் கொண்டு.....மதனை கண்ணகி போல வெளியே ஓடினாள். ஓடிய வேகத்தில் ஓடிந்துவிழுந்த ஒரு தூணில் மோதி கீழ உருண்டாள். அவளும் எரிந்தாள். ஆனால் எழுவில்லை. கொழுந்து விட்டெரியும் அந்தத் தீயின் ஜுவாலையில்...குடல் வெளியே பிதுங்கி.....பேச்சு மூச்சின்றிக் கிடந்த அந்த வாலிபனின் உருவம் தெரிந்தது. வெடித்துச் சிதறிய ஆணியொன்று...அவன் விழியில் வேல்போல் பாய்ந்தது. அதைப்பற்றி அவன் சுவலைப் பட்டதாகத் தெரியவில்லை.

''சமணமத அபிமானிகளுக்கெல்லாம்.....இதுதான் தண்டனை.....'' கொடூரமான சிரிப்போடு இந்த ஆணவ மொழிகளை ஒரு முரடன் அள்ளி வீசினான். கெருப்பின் சிவந்த வெளிச்சத்தில் மனிதர்கள் ஓடிவந்தார்கள். அவர்கள் வருவதற்குள் முரடர்கள் மறைந்து விட்டார்கள். வீடு எரிந்து கொண்டேயிருந்தது. வந்த மனிதர்கள் கண்ணீர் வழிய வேடிக்கை பார்த்தார்கள்.

ஒரே இரவில்...அங்கே ஆச்சார்யாவும் வஞ்சியும் மூழ்ந்த லோகத்தில்! அதே இரவு.....இங்கே சமணக் குடும்பம்..குழந்தையோடு சாவு லோகத்தில்! மதமாற்றும் கைங்கர்யம் இவ்வளவு கோரமாக நடைபெற்றது. கதிரவனின் ஒளிபடு உலகம் விழித்தது. உலகத்தெரியாமல் உறங்கிக்கொண்டிருந்த ஆச்சார்யாவை வஞ்சி எழுப்ப ஆரம்பித்தாள் சாதாரணமாகவா?.....''சுவாமி எழுந்திருங்கள்!'' என்றாள்? இலவ. முகத்தில் தண்ணீரைத் தெளித்து—வாடிய முலைகளை வாரி இறைத்து—அருகே இருந்த வீணையின் நரம்புகளை வேகமாகத் தடவிவிட்டு-எதற்கும் அசையாததால் இறுதியில்..அவர் கன்னங்களை கிள்ளிவிட்டு..... கடைசியில் எழுப்பி முடித்தாள். ஆச்சார்யா அசதியை உதறி... உலவ ஆரம்பித்தார். தெரு வாயிற்பக்கம், 'சுவாமி' என்ற தாழ்மையான அழைப்பு கிளம்பவே 'வஞ்சி!...யாரென்று பார்!'

(11-ம் பக்கம் பார்க்க)

"இரத்த நோயிற"

(ஆருரான்)

'ஆருரான்' என்ற புனைபெயரில் புகுந்துள்ள நண்பர் திரு அரங்கண்ணல் [விடுதலை துணை ஆசிரியர்] முரசொலியில் தொடர்ந்து எழுதிவருவார்.

"பாட்டாளி மக்களே..... என் பரிதபிக்கிறீர்கள்? கர்த்தரின் பிரதிநிதியாக நம்காவலன் இருக்கும்பொழுது கவலையேன்? பரமண்டலத்திலே நமது 'பிதா' இருக்கிறாரென்றால் இகமண்டலத்திலே அவரின் பிரதிநிதியாக இருப்பவன் அல்லவோ நம் மன்னவன்! இடுக்கண் சேர்ந்த பொழுது இறைவனைத் தொழுவதே நமது கடன்.....எனவே, இவ்வுலக இறைவன், ஏழைகள் துயர் என்மேலே மெழுகாகும் உள்ளத்தினன், நமது மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் இருக்கும் பொழுது நமக்கென்ன கவலை? இத்தனை நாள் உங்கள் துயரை துடைக்கவில்லையென்றால் அது மன்னன் பிசகல்ல...நமது துன்பங்களை அவனுக்கு எடுத்து விண்ணப்பித்துக் கொள்ளாதது நமது பிசகுதான்! பிசகு செய்தவர்கள் நாமாக இருந்துகொண்டு கருணைசூர்ந்தியாசிய காவலனைக் குறைகூறுவதில் என்ன பயன்? ஆகவே, மன்னன் மாளிகை நோக்கிச் செல்வோம். மனுயிட்டு நம் மரியாதையைச் செலுத்திவிட்டு நம் குறைகளைக் கூறுவோம். எல்லோரும் கிளம்புங்கள்; ஒவ்வொருவருடைய கைகளிலும் ஒரு கையில் பரமண்டலப் பிதாவின் முத்திரைச் சின்னமாகிய மாதாகோவில் கொடியும், இன்னொரு கையில் இகமண்டலப் பிதாவாம் மன்னர்பிரானின் திருவுருவப் படங்களும் இருக்கட்டுமே....."

★

'ஓரே வழிதான்.....உழைத்துப்பிழைக்க ஒருவனும், உண்டு கொழுக்க ஒருவனுமான நிலை, 'பசி, பசி'யென கதறும் நம் குரல்களை பட்டாடை யுடுத்தி பால்வண்ணச் சோறுண்டு படாடோபத்துடன் இடை கௌிய, புன்னகை குலுங்க 'பிரபு' என்றழைக்கும் ஆடலணங்குகளின் கானல்வரத்தைத் தெருவிடும் சுருதி'யெனக் கருதிக்கொண்டு; 'மானம் போகிறது வயிற்றுக்கு வழியில்லையே, எஜமான்!' என்று அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு எழும்பும் நமது வேதனை யொலிகளை, அவர்கள் மாளிகையிலே வேளா வேளைக்கு எலுமபுங்கறியுந்தின்று ஏப்பம் வந்த பொழுது மெதுவாக ஊளையிடும் நாயின் குரலுக்கு ஒப்பிட்டுப் பார்க்கும் மனதையுடைய மதோன்மத்த மனிதப் பிண்டங்கள்; 'துலாக்'குகள், பண முதலைகள், நிலச்சுவான்தார்கள், ஆலை முதலாளிகள் ஆகியோரின் வாழ்வே தன வாழ்வு, அவர்கள் மனமுவந்து தரும் நம்புகளே தன் சுகபோக வீணையின் நாதக் கருவிகள் என்று எண்ணிக் கொண்டு உல்லாசபுரியின் ஒப்பாரச் சோலையில் வேனாக்கு ஒரு மாளிகை, நிமிடத்திற்கு ஒருதினுசு உணவு, எனவுண்டு களிக்கும் உன்மத்தன்; ஊரிலுள்ளோரின் பசிக்குரலை, பரிதாப அழுகையை 'ஊளை' யென்று மதிப்பிடும் மதியிலியாம் மன்னன், அவன் வமிச பரம்பரை இந்நாட்டின் சரித்திரத்தில் கூட இல்லாது செய்தால் தான் நம் வளைந்த முதுகை நிமிர்த்தி, ஒடிந்த வாழ்வை ஒட்டவைக்க, நாமும் மனிதர்களாக வாழ ஒரு வகை செய்தவராவோம்..... ஒரேவழி சமுதாயத்தையே தலைகீழாகப் புரட்டியமைப்பதுதான். புரட்சி செய்ய வாருங்கள்!"

★

மூன்று குரல்கள் முதலாவது கேபான் என்ற மதவாதிகள் தலைவன், கபடக்குரலின் உபதேச மொழி.

இரண்டாவது, உழைத்து ஊரான்மோலுக்கும் அவர் தம் காலைக் கழுவிக்கிடக்கும் முதலாளிக்கும் ஸ்தாபம் போன ஏழை —பாட்டாளி—எழுப்பிய வேதனைக் குரல்.

மூன்றாவது, ஏழையின் சொந்த வாழ்வைக் கண்டு வெதும்பி, உள்ளம் பொறுங்கி, மனித சமுதாயத்தின் மாணிக்கக் கற்கள் மண்ணில் புதைக்கப்பட்டு மக்கி மடிந்துபோக, மாணிக்கத்தின் ஒளியைக் கொஞ்சங் கொஞ்சமாகத் திருடிபோக சுகத்தில் மாழ்ந்திக் கிடக்கும் கண்ணடிக் கறைகள் (குஷாலாக) வாழ்வதா என்ற கேள்விக் குறியைக்கிளப்பி கேள்வியை உணர்ச்சியாக்கி, உணர்ச்சியை ஊரானும் உன்மத்தர்களின் உடலைக் கூறு போட்டு அவர்கள் பிற்போக்கு எண்ணங்களையும் போக்கையும் அவர்களுடன் பொசுக்கும்படி

(8-ம் பக்கம் பாக்க)

முரசொலி

பெரியார் ஆண்டு 69

சித்திரை 2ஆ புதன்

(14—4—48)

பலியை நிறுத்துங்கள்

பக்தர் குழாம் நிறைந்திருந்தது ஆண்டவன் சந்நிதியில் பயபக்தியோடு வணங்கினர்கள். கன்னத்திலடித்துக்கொண்டனர். அர்ச்சனை செய்தனர். அபிஷேகம் நடந்தது. ஆனல் ஒருவாவது முரட்டுத்தனம் நிறைந்த ஆணின் எலும்பிலிருந்து மேன்மையான பெண்ணை ஆண்டவன் படைத்தார் என்று பைபிளில் கூறியிருப்பதைப்போல கரடு முரடும் நிறைந்த ஒரு துண்டுக் கல்லை கடவுளாக்கிய சிற்பியைப் பற்றி நினைத்துக்கூடப் பார்க்கவில்லை! கும்பல் கலைந்தது. ஆனல் அந்த பக்தர் மட்டும் ஆடிக்கொண்டிருந்தார். தன்னை மறந்து, உலகை மறந்து, ஆண்டவன் ஒருவனைமட்டும் நினைத்து ஆனந்தக் கூத்தாடிக்கொண்டிருந்தார்.

அவருடைய பால்மணம் மாறாத பச்சிளங்குழந்தை சற்று தூரத்தில் நின்று தன் அப்பாவின் விநோதமான அந்த ஆட்டத்தை வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தது. கள்ளங்கபடமில்லாத முகம். சிறு அளவில் திறந்து "பல்லில்லாத எனனைப் பார்" எனக்காட்டும் செவ்விதழ்கள். வெள்ளைக் கண்ணுடிக் குண்டில் அளந்து வட்டமிட்டு கருப்புமைதீட்டியதைப்போன்ற கண்கள். சோற்றில் மோதை வேற்றும்போது ஓடிவிடாதபடி குழி அமைத்து காப்பதைப் போல பொங்கும் அழகு வழிந்தோடிவிடாமல் இருபக்கங்களிலும் குழிகள் அமைத்து எங்கிப் பிடிக்கும் கன்னங்கள். தன் அப்பா ஆசைபோடு தூக்கி உடலை உறுத்தாமல் அணைத்து முத்தம் தருவார் என்றெழுந்து ஆசையால் ஆடிக்கொண்டிருந்த பத்தரை நெருங்கிற்று, நெருங்கி கால்களைத் தொட்டது. மறுவினாடி, ஓடிந்த எலும்புகள், அறுந்த நரம்புகள், சிதறித் தெறித்த செவ்விதழ்கள், தோல் சதை — இரத்தக் குட்டையின் மத்தியிலே ஒரு சிறு மாமிசத் தீவு! அன்பின் சின்னத்தைப் பலிவாங்கிய பக்தி என்ற அந்தப் பலி பீடம் செயலற்று நின்ற அந்தச் சிலையைப்பார்த்து ஒரு வெற்றிச் சிரிப்பு சிரித்தது!

பக்தகோராகும்பர்கதைதான் மேலே தீட்டியுள்ளது. அது காட்டுமிராண்டிக்காலம், புராணக்கதைஎன்றெல்லாம் எண்ணி ஒதுக்கிவிடலாம். ஆனல் நவயுகத்தில், காகரீகத்தில் சிறந்திருக்கும் இந்தக் காலத்தில் உயிபலி நின்றுவிட்டது. ஆனல் வாழ்வு பலியிடப்படுகிறது.

அன்னை பாரதமாதாவின் சன்னிதானத்தில் பக்தர்கூட்டம் நிறைந்திருக்கிறது. உடல் வணங்கி மனம் உருகி வணங்குகின்றனர். ஆனல் தேசியத்தின் போல வி. ஓ. சிதம்பரத்தின் வழிவந்த திருப்பூர் குமரன் சந்ததியாரான, திராவிட இன மக்கள் வாழ்க்கை பலியிடப்படுகிறது. நவீன கோராகும்பர்கள், அவர்களுக்கு பக்தி என்னும் போதையை ஏற்றும் புரோகிதர்கள், அந்தப் பலியை போற்றிப் புகழும் ஏடுகள் எண்ணற்றவையாக மலிந்துகிடக்கின்றன.

வகுப்பு துவேஷம் என்ற தீக்காப்பை அமைத்துக்கொண்டு கிளர்ச்சிப்பாடாகவேலைசெய்து வருகின்றனர். பத்திரிகை பலரும், ஒருசில பணக்காரர்களின் பக்கத்துணை அமைத்து இருக்கிறது என்ற அகங்காரத்தால் மக்களை உயிருள் உணர்ச்சியுமில்லாத சூதாட்டக்காய்களாக மதித்து இஷ்டம்போல நகர்த்தி வைக்கின்றனர் ஆசியவ்நிர்ணய சபையிலிருந்து சென்னைச்சட்ட சபைவரை தீர்மானங்கள், சூழ்ச்சிகள் இவைகளில் தீவிரமாக இறங்கி வேலைசெய்துவருகின்றனர், ஒரு குறிப்பிட்ட வகுப்பார்.

முன்பொருநாள் தோழியர் துர்க்காபாய் கல்விச் சாலைகளில் வகுப்பு வேற்றுமை பாராட்டலாமா எனக்கேட்டார் தேசியத்தின் பேரில்தான் அம்மையாரைப் பாராட்டுகிறோம், சரஸ்வதி பொது உடமையாக இருக்கவேண்டும் என்பதை யாரும் எதிர்க்கக்கூடாதுதான் ஆனல் அம்மன் சந்நிதி பொது உடமையாக இருக்கவேண்டும் என்பதில் அம்மையார் காட்டும் அக்கரை ஆண்டவன் சந்நிதிக்கும் என் காட்டப்படக்கூடாது. ஆறுகால பூஜையிலும் ஒரு வகுப்பார் உணவுக்கும், நித்தியப் பட்டினி மற்றொரு வகுப்பாருக்கும் திட்டமாக இருந்து வருகிறதே அதை எதிர்க்க-மாற்ற, அம்மையாருக்கு என் மனம் வரவில்லை. அவர்கள் இளைய பாண்டவன் அர்ஜுனன் தான் மணந்த திரௌபதியை பங்கிட்டுக் கொடுத்தான் என்பது மட்டுமல்ல தன்னையும் பலருக்கு பங்கிட்டுக்கொடுத்தான எனபதை நினைவுபடுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இப்போது ஒரு கூச்சல் எழும்பியுள்ளது. வடமொழிக்கு ஆக்கம்தேடும்வேலை. ஒரு மொழி தேவையா அல்லவா என்பதல்ல பிரச்சினை. அந்த மொழியை கற்க எத்தனைபேர் ஆசைப்படுகிறார்கள்? ஆசைப்படுபவர்களெலாம் ஓர் வகுப்பாராக இருப்பாரேனும்? உலகுக்கே ஒரு பெருமொழியாக கலைச்சொற்கள் நிறைந்த ஆங்கிலத்தையே விலக்கிவைக்கவேண்டும் என்ற கிளர்ச்சி எற்படும்போது இம்மொழிக்குமட்டும் அக்கறை காட்டப்படவேனும்? இறந்த பணிதர்களை மதிப்பதுபோல வழக்கற்றப்போன அந்த மொழியையும் மதிக்கிறோம் ஆனால் புதைக்கப்படாமல் வெளியில் விட்டிருந்தால் நாற்றம் எடுத்துவிடும் என்று நம் மக்களை எச்சரிக்கிறோம்.

பசியால் துடிப்பவனுக்கு உணவு பரிமாறும்போது, சமத்துவத்தின் போல் அஜீரணத்தால கஷ்டப்படுபவனுக்கும் அதில் பங்குதரவேண்டும் என்று நினைப்பதில் அறிவுமில்லை, அர்த்தமுமில்லை. நிலைமை தாழ்ந்த மக்களை தூக்கி விடுவதில் எல்லோரும் அக்கறைகாட்ட வேண்டும், முக்கியமாக மந்திரிமார் கவனிக்கவேண்டும். நிலத்தில் உழுது, வாணிபஞ்செய்து, இயந்திரசாலைகளில் இரவும், பகலும் உழைத்து நாட்டின் பொருள் வளர்ச்சியை அதிகரித்துக் கொண்டே இருப்பவர்கள் இந்நாட்டின் பூர்வ குடிகளான திராவிடர்கள். அவர்கள் உழைப்பின் பலன்தான் இன்று வாழ்வோர் பெறும் வாழ்வு. அவர்கள் நிலைதவறி வாழ்வதைத் திருத்த முயற்சிக்காமல் இருந்தால் "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை, செய் நன்றி கொன்றமகற்கு" என்ற குறள் ஒன்றையே எடுத்துக் காட்டுவதைத் தவிர வேறு வழியே இல்லை!.

அரசாங்க மாளிகையிலே "பார்ப்பனர் ஒழிக!" என்ற கோஷங்கிளம்பிற்று என்றகேட்டவுடன் திராவிட இனமக்களில் இதயத் துடிப்பின் எதிரொலி அந்தமிருக்கிறது என்பதை அறிகிறோம். ஆனால் அதுவல்ல நாம் கோருவது. பார்ப்பனர்கள் ஒழிய வேண்டாம், இருக்கட்டும். நம்மிடையே இருக்கக் கூடாது. ஜாதி ஆச்சாரங்களிலே, ஆண்டவன் காரியங்களிலே, திருவிழாக்களிலே, நம் பண்டிகைகளிலே முக்கியமாக இந்துச் சட்டத்திலே ஆரியர் ஆதிக்கம், வடமொழிச் செல்வாக்கு மறையவேண்டும், அழிக்கப்படவேண்டும்!. வெறும் கூச்சலாகமட்டும் அதை நிறுத்திவிடக்கூடாது. செயலாற்ற வேண்டும். இதைத்தான் திராவிடர் கழகத்தலைவர் பெரியார் இத்தனை ஆண்டுகளாக நாட்டில் எடுத்துச்சொல்லி வருகிறார்.

லட்சுமி பாதங்கள் பலர் தேவை! கருப்புச்சட்டை அணிய வேண்டிய அவசியங்கூட இல்லை. கதர்சட்டையிலேயே உழைக்கலாம்! ஆனால் மறுபடியும் பழைய சேற்றுக்கே போய் விடக்கூடாது போலும் பழத்தைக் காப்பாற்றிக் கொடுக்கும் பலாப்பழத் தோல்போலத்தான் இருக்கமுடியும். பழத்தைத் தின்றவுடன் தோல் தூக்கி எறியப்படும். வாரீர் தொண்டாற்ற எனத் தேசியத் தோழர்களை, தொண்டர்களை, தலைவர்களை அழைக்கிறோம். அன்பின் காரணமாக. தேசியம் என்ற பலி பீடத்தில் இனவுணர்ச்சியை பலியிடாதீர்கள். அது பாதகமானதுமட்டுமல்ல பிற்காலத்தில் காட்டுமிராண்டித்தனம் என்று பழிக்கப்படக் கூடியதும்கூட!.

★

கோயிலில் நடப்பன.

(நாரா நாச்சியப்பன்.)

கோயிலுக்குப் போய் வருகின்றாய் கண்ணே— அந்தக்
கோயிலிலே கண்டதென்ன கண்மையுண்டா சொல்வாய் (கோ)
வாயிருக்கும் போதினிக்கும் செந்தமிழை விட்டு
வடமொழியில் மந்திரங்கள் சொல்லுகின்றான் பார்ப்பான் (கோ)

செந்தமிழைக் காகைண்ட பண்டிதர்கள் எல்லாம்
செல்லுகின்றார் கோயிலுக்குத் தினந்தினமும் என்றால்
புந்தியிலே உணர்வில்லை வடசொல்லை நீக்கப்
போதியநெஞ் சாமில்லை வளாவிட்டு விட்டார் (கோ)

இலட்சலட்சம் பணமழித்துக் கட்டிவைத்த செல்வர்
ஏனென்று கேட்பதற்கோ பகுத்தறிவே இல்லை
அலட்சியமாய்ச் செல்லுகின்றார் ஊர்திகளில் ஏறி
யாருக்கும் தமிழ்பற்றி அக்கறையே இல்லை. (கோ)

செந்தமிழைக் கெடுப்பதனும் உறுதிகொண்ட பார்ப்பான்
செல்லுகின்றான் கல்லுருவம் இருக்குமிடை சென்று
வந்திருக்கும் பக்தர்களின் மடத்தனத்தைக் கண்டு
வாங்குகின்றான் பணம்பழம்பால் தேன் அரிசி எல்லாம் (கோ)

இரத்த ஞாயிறு

பக்க தொடர்ச்சி

யான நிலையை எட்டச் செய்வ தற்காக இரவுப் பகலும் இடை யறாது உழைத்த 'போல்ஷிவிக்' குகள்—லெனின் கட்சியினர் எழுப்பிய முரசொலி.

★

மூன்று கோல்கள்.....ஜார் மன்னனின் சர்வாதிகாரத்திலிர், நண்புடனின் மதத்திலிர் இரண்டு ரஷ்யா என்கிற நிலையைத் தங்கள் இரும்பு நகங்களில் பொருத்திக்கொள்ள நகங்களின் கூரிய நுனியென்கிற முதலாளி கள் படாதபாடு படுத்திய நாள்! பொறுத்துப் பொறுத்துப் பார்த்து 'பொறுமை' கணவக் குகவாதி பொங்கி எழுந்தால் தான் வயிறார உண்டு வாழ முடியும் என்ற எண்ணங் கொப் பளிக்க, அதற்கு வழிகாட்டியாக மார்க்ஸ் காட்டிய இன்ப மாளி கைக்கு அழைத்துச் சென்ற லெனின் குழுவினர்—பாதையில் ரஷ்யப் பாட்டாளி மக்கள் வந்து கொண்டிருந்த காலம்! வேலை நிறுத்தப் புயல் எங்கும் வீச ஆரம்பித்துக் கொண்டிருந்த வேளை! 'நினைத்தால் தொழிற் சாலையினின்றும் கழுத்தைப் பிடித்துத் தள்ளு; மீறினால் கதை முடிகொடு, எதிர்த்தால் போலீஸ் படைகளை ஏவி அவர்கள் உடலைப் பதம்பார்!' என்றளவில் திமிர்கொண்டிருந்த அராஜகத் தர்பாரின் பஞ்ச மெத்தைகளின் தீப்பொறிகள் திடீர் திடீரென விழுந்துகொண்டிருந்த காலம்... 'ஐயோ, பசி' என்ற பாட்டாளி யின் பரிதாபக் குரல்,

'உழைக்கிறாய்...காலை முதல் இரவு வரை உழைக்கிறாய்..... ஆனால் உன் வயிறு ஒரு வேளை கூட நிரம்பியதில்லை. பாட்டா ளிக் கோழானே, இதன் என்? சிந் தித்துப்பார்.....இதன் ஏன்?" என்று போல்ஷிவிக்குகள் ஜார் காக்து ஏழையின் துயரை, இழி நிலையை 'ஏன்?' என்ற கேள்விக் குறிபால் விளக்கும் காட்சிகள் ஜாக்கிக! ஒன்று வேதனைக் குரல், இன்னொன்று எனை இந்த வேதனை' என்று விளக்கிக் காட் டுவது, ஒன்று தீப்பொறி மற் றொன்று அப்பொறிக்கு 'கா ரணம்' என்ற எண்ணெயை ஊற்றி 'காரியம்' சித்தியுற தீயை வளர்த்து விடுவது. இந்த இரண்டு குரல்களும் நிலப்பி புக்கள் பண முதலைகள் ஆகியோ ரின் நெஞ்சத்திலே, நிலியைப் பதித்தன.

மண்டலத்தைத் தன் காலடி யிலே, சுட்டுவிரல் நுனியிலே வைத்திருக்கும் முதலாளிகள்—மானிடசீயல்வர்களின் இவி எழுப்பிய அபயக்குரல், மந்த காச வதனஞ் மாளிகையின் அந்தப்புரத்திலே அணைவுகள் அன்னங்களென அசைந்து வரும்பொழுது எற்படும் கால டிச் சபதத்தில், அவர்கள் ஓய் யாரமாக 'இத்தாருங்கள்' என்று 'வோட்கா'வை தங்கக்கிண்ணி யில் ஊற்றிக் கொடுக்கும் பாணி யில்.....குயில் குரலையும் வீணை இசையையும் ஒப்பிட்டு 'இது சரியா? அது பொருந்துமா?' என்று தர்க்க சாதுரியத்தில் ஈடு பட்டுக் கிடந்த ஜார் மன்னனின் காதிலே விழுந்தது. விழுந்தது தான் தாமதம் தனது இரகசிய தாகபதாதிகளான போல்ஷ் வேட்டை நாய்களின் கூரிய பற் களுக்கு வேலை கொடுத்தான் ஜார்! 'கொடுங்கோண்மை ஒழிக!' என்று கூவிஞை பரம்தசிப் பயல் கூழுக்கையும் கூலிக்கா இவ்வளவு திமிர்! பிடி, விடாதே! உதை! சுடு!!" உத்திரவுமேல் உத்திரவு பறந்து கொண்டிருந் தது. ஆங்காங்கு வேலை நிறுத் தங்கள் என்னும் அத்தகைய இடங் கள் நிணக்காடுகள் என்னவில் நிகழ்ச்சிகள் விளைந்தன. தொ ழிலாளர்கள் துப்பாக்கி முனையை மார்பிலே தாங்கத் தயங்கவில்லை.

அப்பொழுதுதான்...'தொழி லாளத் தோழர்களே' என்று ஒருவன் உள்ளத்தில் வஞ்சத் தையும் உதட்டில் அன்பையும் வைத்துக்கொண்டு அழுகக் குரலில் எழுப்பினான். ரஷ்ய மதக்குருக்களில் ஒருவனான இவன் தூலில் பாட்டாளிக்குப் பரியும் தொனி செய்கையால் இயேசுவின் இரண்டாவது அவ தாரமோவென நினைக்கும்படி யான நிலை அத்தனையும் இருந் தது. அவன் எழுப்பிய குரல் தான் நாம் கட்டுரையின் முத லில் குறிப்பிட்டது.

தொழிலாளருக்கு, வறுமை யால் வாடி வதங்கும் பாட்டாளி களுக்கு நன்மை செய்வதே தன் நோக்கம் என்று கூறிக்கொண்டு அதற்கான எல்லா செயல்களை யும் தனது ரஷ்ய ஆலைத் தொழி லாளர்களின் சபை (Assembly of Russian Factory works) சாதிக்கும் என்று கூறிக் கொண்டு தொழிலாளரின் தொண்டனைச் சொல்லிக் கொண்டு புகுந்தான். இந்த சபைக்கு செய்ண்ட் பீடர்ஸ்பர்க் மண்டலத்தின் எல்லா மாவட் டங்களிலும் கிளைகள் இருந்தன. 1904ல். வேலைநிறுத்தப் புயல் வீச ஆரம்பித்துக் கொண்டிருந்த நேரத்தில் புடிலோவ் தொழி பிரம்மாண்டமான வேலை நிறுத் தத்துக்கான ஏற்பாடுகள் மும முரமாக நடந்து கொண்டிருந்த

பொழுதுதான் அந்த கேபான் என்ற மதக்குரு தனது ஆசை மொழிகளைக் கூறி, 'மன்னரைப் பேடடிகண்டு நம் குறைகளைக் கூறினால், சமர்ப்பித்தால் அவன் மன்னன் செய்வான்' என்று தொழிலாளரிடையே பிரச்சாரம் செய்து அதற்கானதொரு திட்டத்தை யுரைத்தான்.

ஜாருக்து நாம் விடுக்கும் வேண்டுகோள்கள் செவிடன் காதில் ஊதும் சங்கொலியாகத் தான் ஆகும், எதிர்பார்க்கும் பலனில் ஒரு துளிகூட ஏற்படாது' என்று போல்ஷ்விக்குகள் தொழிலாளர் கூட்டத்திலே விளக்கி யுரைத்தும், ஆசை மொழிகளால் மயங்கிய பாட்டாளி மக்கள் "மன்னன் கல்லவன், கல்லது செய்வான்! என்று மதக்குரு சொல்வது பொய்யாகவாயிருக்கும்" என்றெண்ணி ரஷ்யக் கொடுங்கோலன் ஜார் அதுபோது தங்கியிருந்த "மாரிக்கால மாளிகை" (Winter Palace)யை நோக்கி ஊர்வலமாக, மதக்குரு காட்டிய மார்க்கப் படியே, ஒரு கையில் ஜாரின் படமும், மற்றொரு கையில் மாதாகோவில் கொடியும் தாங்கிக்கொண்டு 1905ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ந்தேதி காலை, தங்கள் மனைவி குழந்தைகள் அத்தனை பேருடனும் அணிவகுத்துச் சென்றனர். மாரிக்கால மாளிகையின் முன் வெள்ளம் போல் மக்கள் கூட்டம், கிட்டத்தட்ட 140000 பாட்டாளிகள் எண்ணெய் காணாத் தலையாய், ஒட்டிய வயிற்றைக் காட்டிக் கொண்டு அணிந்திருந்த உடை கிழிந்துதொங்க, குழந்தைகள் பசி தாங்காது 'அம்மா' வென அழுவதற்குக் கூட சக்தியின்றி முகை னெறு கொண்டிருந்தனர்.

"செயிண்ட் பீடர்ஸ் பர்க் பாட்டாளிகளாகிய நாங்கள், எங்கள் மனைவிகள் சூழ, குழந்தைகள் பின்தொடர, வயிற்றுத் தீயுடன் வாடிக்கிடக்கும் எங்கள் தந்தையர் குடிசையிலே வாடிக்கிடக்க, மன்னர் பிரானுகிய உங்கள் முன் 'எங்களைக் காப்பாற்றுங்கள், எங்கள் வயிற்றுக்கு ஒருவழி செய்யுங்கள்' என்று வேண்டிக்கொள்ள வந்துள்ளோம், ஏழ்மை எங்களைப் பிடித்துத் தின்கிறது. உழைப்புப்பளு எங்கள் ஒவ்வொரு அவயவத்தையும் கொஞ்சங் கொஞ்சமாக உருக்கிச் சீர் குலைக்க ஆரம்பித்து விட்டது, நாங்கள் மனிதர்களாக எங்கள் எஜமானர்களால் நடத்தப்படவில்லை.....பொறுமை பால் நாங்கள் வாழ்விழந்து வதைகின்றோம்..... வரவர எங்கள் நிலை கூரிய வாளின் முன் அசையாது நிற்கும் ஆடாகி விட்டது! இந்நிலை இப்படியே விரிந்தால்..... எங்களருமை மன்னர் பிரானே, உமது குடிகளாகிய எங்கள் வாழ்வு முடிந்து விடும்.....நாங்கள் சாவதைத் தவிர வேறு வழியில்லை....." இதுதான் மதக்குருவின் போதனையால் மன்னனிடம் மீட்டப்பட்ட வேண்டுகோளில் இருக்கப்பட்டிருந்த வாக்கியங்கள்.

மன்னன் படித்தான்...இல்லை பார்த்தான்! மக்களின் பெருங் கூட்டத்தையும், அவர்கள் தன் மாளிகையெதிரே நிற்கும் அலங்கோலத்தையும் கண்ட இரண்டாம் நிகோலஸ் மன்னன்—ஜார்—கண்கள் ஒருமுறை விரிந்து சுருங்கின! விரிந்து சுருங்குவதற்குள் துப்பாக்கி முனையைத் தாங்கச் சுடத் தயாராகயிருந்த போலீஸ் படைகள் மன்னன் வாயைப் பார்த்துக்கொண்டே யிருந்தனர்.....ஆத்திரத்தால் மடிந்த உதடுகளை மீக்கிக்கொண்டுவந்த சொற்கள் ஜார்ப்பேயின் கோபாக்கினி 'சுடுங்கள்' என்று இருந்ததுதான் தாமதம் 'ஐயோ, அம்மா' என்ற கூச்சல், 'அடபாவி' என்ற பேரொலி அத்தனையும் சாதாரண ஒலியாக்கிக் கொண்டு துப்பாக்கிக் குண்டுகள் 'பட, பட'வென, பறந்துகொண்டிருந்தன! குழந்தைகளை மார்பிலே தாங்கிக் கொண்டிருந்த தாய் குப்புறவிழுந்த காட்சி! திசை கெட்டு இங்குமங்கும் ஓடும் தொழிலாளர்களின் காலடியிலே நசுங்கி கை வேறு கால் வேறுக, விழிகள் பிதுங்கிக்கிடக்கும் குழந்தைகள்..... பீடர்ஸ் பர்க்கின் தெருவில் இரத்த வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது! எங்கும் இரத்தக்காடு!

சோறு வேண்டிய தொழிலாளர்களின் உடல்கள் துப்பாக்கிக் குண்டுகளால் சுவைக்கப்பட்டு ஆங்காங்கு சிதறிக் கிடந்தது. ஜார் மன்னன் தனது வீரதீரப் படைகளின் பராக்கிரமத்தைக் கண்டு மகிழ்ந்தான்...மதக்குரு கேபானை அதிகாரவாக்கம் தட்டிக்கொடுத்தது. 'சபாஷ், கேபான், நல்ல சந்தர்ப்பசாலி நீங்கள்!' என்று அவனுக்கு ஆட்சியாளரிடமிருந்து பாராட்டுக் கிடைத்தது.....

1904 ஜனவரி 9! கேபான் காட்டிய மார்க்கத்தினால் சென்ற தலைல் ஏற்பட்ட பயனை உணர்த்தியது.....அந்த நாளை 'ரத்த ஞாயிறு' என்று தொழிலாளர்கள் எழுப்பிய ஒலி, ஆவேசங் கலந்த குரலே, கொடுங்கோன்மை ஒழிக!' என்ற பேரொலியை ரஷ்யா முழுவதும் எதிரொலிக்

10-ம் பக்கம் பார்க்க



நேற்று வரையில்

மார்ச் 29

ஒமாந்தூராரை வெற்றிகாண முடியாத வயிற்றெரிச்சலால் டாக்டர். சுப்பராயன் அவர்கள் மந்திரி பதவியை ராஜினமா செய்துவிட்டார்.

●

ஏப்ரல் 3

ஐரோப்பிய நாடுகளுக்கு உதவி செய்வதற்காக அமெரிக்க ஜனசபை செனேட்டால் நிறைவேறியுள்ள 680-கோடி டாலர் மான்யத்தில் ஜனதிபதி ட்ரூமன் கையொப்பமிட்டார்.

●

ஏப்ரல் 5

இந்திய சர்க்கார் வர்த்தக மந்திரி பாபா ராஜினமா செய்தார்.

●

இந்திய டொமினியன் பார்லிமென்டில் ஜானகாத் சமன்தானத்திற்கு சொந்தமான சில சொத்துக்களை அட்மினிஸ்டிரேட்டரிடம் ஒப்படைப்பதற்கு அதிகாரம் அளிக்கும் மசோதா நிறைவேறியது.

●

மார்ஷல் திட்டம் வரையறையற்ற வள்ளல் தன்மையையும் பெருந்தன்மையையும் காட்டுகிறது என்று பிரிட்டிஷ் பிரதமர் அட்லி தனிப்பட்ட முறையில் ட்ரூமனுக்கு செய்தியனுப்பினார்.

●

ஏப்ரல் 6

சேமனப்பசன்மை, ராணுவம் ஆகிய உதவிகள் ஐரோப்பாவைப் பற்றி பிரிட்டனும், ரஷ்யாவும் ஒரு உடன்பாட்டில் கையொப்பமிட்டுக்கொண்டன.

●

ஏப்ரல் 8

கிழக்கு வங்காளத்தில் ஆங்கிலத்துக்கு பதிலாக வங்காள மொழியே பேசவேண்டுமென்ற தீர்மானம் பிரதமரால் கொண்டு வரப்பட்டு நிறைவேறியது.

●

இந்தியாவில் "பென்சிலின்" தயாரிக்கும் முறைகளைத் தெரிந்தவர, ஜெனரல் சோகே, டாக்டர் கணபதி ஆகியோர் ஐரோப்பாவுக்கும், அமெரிக்காவுக்கும் சென்றுள்ளனர்.

●

பெர்லின் நிர்வாகத்தை வகித்துவரும் நான்கு வல்லரசுகளும் சம்பந்தப்பட்ட ஆறு கமிட்டிகளை (கொம்மண்டேட்டர) கலைத்துவிட வேண்டுமென்று ரஷ்யாவின் வற்புறுத்தலுக்கு மேற்கு வல்லரசுகள் இன்று இணங்கின.

●

ஏப்ரல் 10

ராணுவ உதவி கொண்டு கொலம்பியாவில் உள்ள லிபரல் கட்சியார் சர்க்காரைகைப்பற்றினர்கள். கட்சித்தலைவர் ஜார்ஜ் எல்ஜர் கெய்தான், கொலைசெயப்பட்டார்.

இரத்த ஞாயிறு

9-ம் பக்க தொடர்ச்சி

ச் செய்தது ..... இந்த 'ரத்த ஞாயிறு' கால் மதத்தருவின் — கபட சந்நியாசியின் போதனை தந்த பாடத்தை தொழிலாளருக்கு உணர்த்தி, அவர்கள் எதிர்கால வாழ்வை குழ்ச்சிக்கும் சுயநலத்துக்கும் ஆளாகாத சுதந்திர வீரர்களாய் ஆக்கியது!

"மன்னன் நம்மை வதைத்தான்; மன்னனை நாம் வதைப்போம்!" என்று ஆவேச ஒலியைத் தொழிலாளர் எழுப்பு மாறு உணர்ச்சியைத் தூண்டிவிட்டதாலும் "ரத்த ஞாயிறு" (Bloody Sunday) என்றழைக்கப்படும் அந்த நாள்தான்!

கீழ்கண்ட இடங்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர் தேவை.

தாகர்கோவில்
கோயமுத்தூர்
திருக்கோவிலூர்
வந்தவாசி
திருப்பூர்

விபரங்கட்கு:—
தீர்வாயி
முரசொலி அலுவலகம்
திருவாரூர்.

முரசொலி
ஆண்டு சந்தா 5-ரூபாய்
தனிபிரதி 1½-அணா
முரசொலி அலுவலகம்
திருவாரூர்